**சாட்சிய வாக்குமூலம்**

# மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தென்காசி.

## OS. No. 110/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வா.சா | : | 2 | நாள் | : | 03.07.2025 |
| பெயர் | : | சிவசங்கரி | ஜாதி | : | |
| தந்தை பெயர்/ | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03rd day of July 2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

நான் தற்போது விக்கிரமசிங்கபுரம் சார் பதிவாளர் அலுவலகத்தில சார் பதிவாளராக பணிபுரிந்து வருகிறேன். இன்று அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களின் நகல் தாக்கல் செய்துள்ளேன். அசல் பதிவேட்டை கொண்டு வந்துள்ளேன். கடந்த 18.05.1992 ம் தேதி நல்லையா ராஜா மனைவி மஞ்சம்மாள் என்பவர் எழுதி வைத்த உயில் ஆவணத்தை அவர் மதியம் 3 மணி முதல் 4 மணிக்குள்ளாக எங்கள் அலுவலகத்தில் தாக்கல் செய்து பதிவு கட்டணம் செலுத்தியதாக காணப்படுகிறது. அது அப்போதைய சார்பதிவாளாரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தின் எங்கள் அலுவலக பதிவேட்டில் மேற்கொள்ளப்பட்ட பதிவு நகல் இன்று தாக்கல் செய்துள்ளேன். அது சாட்சி தரப்பு சான்றாவணம் 1 ஆகும். அந்த ஆவணம்

சங்கரன்கோவில் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள உயிலை சாட்சி தரப்பு சான்றாவணம் 1ன் மூலம் இரத்து செய்து எழுதப்பட்டுள்ளது. சங்கரன்கோவில் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.18/1992 நாள் 04.05.1992 ஆகும். உயில் தாக்கல் செய்து பதிவு செய்யும் நபர் எங்கள் அலுவலக கையொப்பம் மற்றும் கைரேகை புத்தகத்திலும் சாட்சி தரப்பு சான்றாவணம் 1ற்கான பதிவேட்டிலும் பெறப்பட்டு அதன்பின்னரே பதிவு செய்யப்பட்டது. அவ்வாறு பதிவு செய்யும் நபரை இரண்டு நபர்கள் அடையாளம் காட்டி அதனடிப்படையில் அவரது கைரேகையும், கையொப்பமும் பெறப்பட்டுள்ளது. சாட்சிகள் கணபதிதேவர் மற்றும் அக்பர் ஷா ஆவார்கள். ஆவணத்தை திரு.சேகர் வழக்கறிஞர் அம்பாசமுத்திரம் என்பவர் தயாரித்ததாக காணப்படுகிறது. அவை கமலாட்சி என்பவர் தட்டச்சு செய்ததாக காணப்படுகிறது. அவர் உரிமம் எண்.A/35/CME/91 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>குறுக்குவிசாரணை</u>**

18.05.1992 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அப்போதைய சார்பதிவாளர் பெயர் ஞாபகமில்லை. அவரது பெயர் இன்று நான் தாக்கல் செய்துள்ள பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை. இந்திய பதிவு சட்டத்தின் கீழான நடைமுறைகளை பின்பற்றி பதிவு செய்யப்பட்டதா என்று எனக்கு நேரில் தெரியாது. பதிவு செய்த சார் பதிவாளர் எங்கு உள்ளார் என்று எனக்கு தெரியாது. பணியில் உள்ளாரா என்றும் தெரியாது. ஆவணத்தை எழுதி வைத்த நபரை அச்சுறுத்தியோ தவறாக வழிநடத்தியோ

தகாநிலை வற்புறுத்தல் மூலமாக ஆவணம் எழுதி பதிவு செய்யப்பட்டதா என்று எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.03 18:22:33 +0530